இன்றைய செய்தி நாளைய வரலாறு

கலைஞர் 100 1924 - 2024

# முரசொலி

Murasoli

நிறுவனர் : கலைஞர் மு. கருணாநிதி

www.murasoli.in murasolidaily@gmail.com

வீழ்வது நாமாக இருப்பினும் வாழ்வது தமிழாக இருக்கட்டும்

தொடக்கம் : 10.8.1942 – முரசு : 82 – ஒலி : 225 – திருவள்ளுவர் ஆண்டு 2055 – பங்குனி 13 – செவ்வாய்க்கிழமை 26 மார்ச் 2024 – வெளியூர் 10 பக்கங்கள் Established : 10.8.1942 - Volume : 82 - Issue 225 : Thiruvalluvar Year - 2055 - Panguni 13 - Tuesday 26 March 2024 - Dak 10 Pages ₹ 5.00

### நாடாளுமன்றத் தேர்தல்: ‘இந்தியா’ கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தமிழ்நாடு முழுவதும்

# கழகத் தலைவர் - முதல்வர் மு.க.ஸ்டாலின் தொடர் பிரச்சாரம்!

## எட்டையபுரம் - சிந்தலக்கரையில் இன்று மாபெரும் பொதுக்கூட்டத்தில் உரையாற்றுகிறார்!

2024 ஏப்ரல் 19 அன்று நடைபெற உள்ள நாடாளுமன்றத் தேர்தலையொட்டி, தமிழ்நாடு முதலமைச்சர், கழகத் தலைவர் **மு.க.ஸ்டாலின்** அவர்கள் தமிழ்நாடு முழுவதும் இந்தியா கூட்டணி வேட்பாளர்களை ஆதரித்து தேர்தல் பிரச்சாரம் செய்து வாக்குச் சேகரிக்கிறார்.

கழகத் தலைவர் அவர்கள் மேற்கொள்ளும் தேர்தல் பிரச்சார பயண விவரம் வருமாறு :-



| தேதி | நாடாளுமன்ற தொகுதி |
|---|---|
| **26.03.2024 (செவ்வாய்க்கிழமை)** | **தூத்துக்குடி, இராமநாதபுரம்** |
| **27.03.2024 (புதன்கிழமை)** | **தென்காசி, விருதுநகர்** |
| **29.03.2024 (வெள்ளிக்கிழமை)** | **தருமபுரி, கிருஷ்ணகிரி** |
| **30.03.2024 (சனிக்கிழமை)** | **சேலம், கள்ளக்குறிச்சி** |
| **31.03.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **ஈரோடு, நாமக்கல், கரூர்** |
| **02.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **வேலூர், அரக்கோணம்** |
| **03.04.2024 (புதன்கிழமை)** | **திருவண்ணாமலை, ஆரணி** |
| **05.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **கடலூர், விழுப்புரம்** |
| **06.04.2024 (சனிக்கிழமை)** | **சிதம்பரம், மயிலாடுதுறை** |
| **07.04.2024 (ஞாயிற்றுக்கிழமை)** | **புதுச்சேரி** |
| **09.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **மதுரை, சிவகங்கை** |
| **10.04.2024 (புதன்கிழமை)** | **தேனி, திண்டுக்கல்** |
| **12.04.2024 (வெள்ளிக்கிழமை)** | **திருப்பூர், நீலகிரி** |
| **13.04.2024 (சனிக்கிழமை)** | **கோவை, பொள்ளாச்சி** |
| **15.04.2024 (திங்கட்கிழமை)** | **திருவள்ளூர், வடசென்னை** |
| **16.04.2024 (செவ்வாய்க்கிழமை)** | **காஞ்சிபுரம், திருபெரும்புதூர்** |
| **17.04.2024 (புதன்கிழமை)** | **தென்சென்னை, மத்திய சென்னை** |

குறிப்பு : முதலமைச்சர், கழகத் தலைவர் அவர்கள் மேற்குறிப்பிட்டுள்ள இடங்களில் பிரச்சாரத்திற்கு குறித்த நேரத்திற்குள் செல்ல வேண்டியுள்ளதால், காலத்தின் அருமை கருதி, எக்காரணம் கொண்டும் கழகத் தோழர்கள், வழியில் வேறு எவ்வித நிகழ்ச்சிகளையும் ஏற்பாடு செய்திட வேண்டாமென கண்டிப்புடன் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

“அண்ணா அறிவாலயம்”
சென்னை - 18.

**தலைமைக் கழகம்,**
தி.மு.க.

### மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க

# ‘இந்தியா’ கூட்டணி வெல்வது காலத்தின் கட்டாயம்!

## தேனி நாடாளுமன்றத் தொகுதி தேர்தல் பிரச்சாரத்தில் - அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறைகூவல்!

**உசிலம்பட்டி, மார்ச் 26-**

**தேனி நாடாளுமன்றத் தொகுதிக் குட்பட்ட உசிலம்பட்டியில் பெருந்திரளாகக் கூடியிருந்த மக்கள் மத்தியில், இளைஞர் நலன் மற்றும் விளையாட்டு மேம்பாட்டுத் துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள், தேனி நாடாளுமன்றத் தொகுதி தி.மு.க. வேட்பாளர் தங்க தமிழ்ச்செல்வனுக்கு வாக்குகள் சேகரித்தார்.**

**அப்போது அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அலைகடலெனத் திரண்டிருந்த மக்கள் மத்தியில் சிறப்புரையாற்றினார். “மாநிலங்களின் கல்வி உரிமை, மொழி உரிமையை மீட்டெடுக்க; “இந்தியா” கூட்டணி வெல்ல வேண்டியது காலத்தின் கட்டாயம்!” என்று குறிப்பிட்டார்.**

அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் ஆற்றிய உரை வருமாறு:-

தேனி நாடாளுமன்றத் தொகுதியில், நம்முடைய மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணியான, `இந்தியா கூட்டணி’ சார்பாக கழகத்தின் வெற்றி வேட்பாளராக, நம் வெற்றிச் சின்னமாம் உதயசூரியன் சின்னத்தில் போட்டியிடுகிற தங்க தமிழ்ச்செல்வன் அவர்களுக்கு வாக்கு சேகரிக்கிற இந்தச் சிறப்பான பிரச்சாரக் கூட்டத்தில் பங்கேற்பதில் மகிழ்ச்சி அடைகின்றேன்.



கடந்த 2019ஆம் ஆண்டு நடந்த நாடாளுமன்றத் தேர்தல், 2021ஆம் ஆண்டு சட்டமன்றத் தேர்தல் என இரண்டு தேர்தல்களிலும் உசிலம்பட்டி மக்கள் நம்மை ஏமாற்றி விட்டீர்கள். மறுபடியும் ஏமாற்றுவீர்களா? இப்போது மறுபடியும் ஏமாற்றினீர்கள் என்றால், நாம்தான் ஏமாந்து போவோம்.

### மிகப்பெரிய எழுச்சி

நான் பார்த்த மூன்று நாடாளுமன்றத் தொகுதிகளில் இந்த தேனி தொகுதியில்தான் மிகப்பெரிய எழுச்சி, மிகப்பெரிய ஆரவாரம், மிகப்பெரிய உற்சாகத்தைக் காண்கிறேன். ஆனால், இந்த தேனி நாடாளுமன்றத் தொகுதிக்கு ஒரு மிகப்பெரிய சிறப்பு இருக்கிறது.

அது என்ன சிறப்பு என்று உங்களுக்கே தெரியும். சென்ற முறை 2019 இல் 39 தொகுதிக்கு 38 தொகுதி வெற்றி பெற்றோம். லட்சக்கணக்கான வாக்குகள் வித்தியாசத்தில் வெற்றி பெற்றோம். ஆனால், தேனி நாடாளுமன்றத் தொகுதியை மட்டும் நான் நம்பவே மாட்டேன்.

இந்த முறை நீங்கள் அதைச் செய்து விடுவீர்களா? எந்தச் சின்னத்திற்கு வாக்களிக்கப் போகிறீர்கள்? கையைக் காட்டிச் சொல்லுங்கள்.

(மக்களெல்லாம் கையை உயர்த்தி பலத்த குரலில் “உதயசூரியன்” என்கிறார்கள்) உதயசூரியன் சின்னத்தில் வாக்களித்து, அண்ணன் தங்க தமிழ்ச்செல்வன் அவர்களை லட்சக்கணக்கான வாக்கு வித்தியாசத்தில் வெற்றி பெற வைத்து நீங்கள் நாடாளுமன்றத்திற்கு அனுப்ப வேண்டும்.

### புதிய கல்விக் கொள்கை

புதிய கல்விக் கொள்கை மூலமாக, குலக்கல்வியை மறுபடியும் ஒன்றிய அரசு திணிக்கப் பார்க்கிறது. குலக்கல்வித் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள். குலக்கல்வித் திட்டம் என்றால் என்ன? அப்பா என்ன தொழில் செய்கிறாரோ அதைத்தான் குழந்தையும் செய்ய வேண்டும், படிக்கக்கூடாது, வேலைக்குப் போகக்கூடாது. அப்பா செருப்பு தைத்தால், மகனும் செருப்பு தைக்க வேண்டும் என்ற ஒரே நோக்கத்தோடுதான் இந்தத் திட்டத்தைக் கொண்டு வருகிறார்கள்.

இதுவரைக்கும் இந்த ஐந்து வருடத்தில் இந்தி, சமஸ்கிருதத்தின் வளர்ச்சிக்கு கிட்டத்தட்ட 1,500 கோடி ரூபாய் ஒதுக்கி இருக்கிறார்கள். ஆனால், தமிழ் வளர்ச்சிக்கு இதுவரை எந்த நிதியும் ஒதுக்கவில்லை.

மோடி இங்கு வந்து நன்றாக வடை சுடுவார். வந்து பேசும்போது திருக்குறள் எல்லாம் பேசுவார். யாருக்குமே புரியாது. ஆனால் இதுவரைக்கும் தமிழ் வளர்ச்சிக்கு ஒரு ரூபாய் கூட ஒதுக்கவில்லை.

கல்வி உரிமை மொழியுரிமை ஆகியவற்றை நாம் மீட்டெடுக்க வேண்டும் என்றால் இந்தியா கூட்டணி வெற்றி பெறுவது காலத்தின் கட்டாயம்.

### கொரோனா பெருந்தொற்று

2021இல் நாம் ஆட்சிக்கு வரும்போது என்ன நிலைமை என்று உங்களுக்குத் தெரியும். கொரோனா பெருந்தொற்று. நாம் அனைவரும் வீட்டில் அடைந்து கிடந்தோம்.

மோடி என்ன செய்தார்? திடீரென்று, ‘எல்லோரும் வீட்டிற்கு வெளியே வாருங்கள், விளக்கை ஏற்றுங்கள், தட்டு எடுத்து வாருங்கள், ஒலி எழுப்புங்கள்.

தொடர்ச்சி 3- ஆம் பக்கம்